முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.9.2025) தலைமைச் செயலகத்தில், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் (தாய்லாந்து) தலைவர் ஜேம்ஸ் இங் (Mr. James NG), டெல்டா எல்க்ட்ரானிக்ஸ் (தைவான்) துணைத் தலைவர் மார்க் கோ (Mr. Mark KO) ஆகியோர் சந்தித்து பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் முதலீடு, புதிய வணிக மேம்பாடு மற்றும் அரசு உறவுகள் துணைத் தலைவர் ஓம் பிரகாஷ் ராமமூர்த்தி, முதலீடு மற்றும் அரசு உறவுகள் மூத்த இயக்குநர் என்.வரதராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.9.2025) தலைமைச் செயலகத்தில், கஜகஸ்தானின் ஷிம்கென்ட்டில் நடைபெற்ற 16வது ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் -2025 போட்டியில் இந்திய அணியில் இடம்பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த - இளைஞர் ஆண்கள் பிரிவில், தனிநபர், குழு மற்றும் கலப்பு ஜோடிகளில் தங்கப் பதக்கங்கள் வென்ற எஸ்.எம். யுகன், இளைஞர் பெண்கள் பிரிவில் தனிநபர் மற்றும் குழு போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற நிலா ராஜா பாலு, தனிநபர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ஆந்த்ரா ராஜசேகர் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

தொலைநோக்குடன் முன்னோடித் திட்டங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இதையெல்லாம் சமத்துவத்துக்கு எதிரானவர்களுக்கு அலர்ஜியை வழங்கியிருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாத அவர்கள், இந்த வளர்ச்சிக்கு காரணமாக இருக்கின்ற திராவிட மாடல் மீது, அவதூறுகளை பரப்புகிறார்கள். அவர்களையெல்லாம் புறந்தள்ளி, எங்களுடைய பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறோம்!

அடுத்தபடியாக, கூட்டாட்சி முறை வலுப் பெறவேண்டும்; மாநில உரிமை காக்கப் படவேண்டும் என்று தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம்.

நேற்றுகூட உங்கள் நிகழ்ச்சிகளில், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், நிதி விவகாரங்களில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கடைப்பிடித்து வருகின்ற மாற்றாந்தாய் மனப்பான்மையை குறிப்பிட்டு, கூட்டுறவு கூட்டாட்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசினார்.

நாங்கள் ஏன் தொடர்ந்து கூட்டாட்சிக்காக பேசுகிறோம் என்றால், வளமான இந்தியா, வலிமையான இந்தியாவும் உருவாக வேண்டும் என்றால், மாநிலங்கள் வலிமையாக இருக்கவேண்டும்!

மாநிலங்கள் தங்களுடைய வளர்ச்சிப் பாதையை தாங்களே வகுக்கவேண்டும். குறிப்பாக, கல்வி மற்றும் மருத்துவம் மாநிலங்களின் கையில் இருக்கவேண்டும்.

தமிழ்நாட்டிற்கு ஓரவஞ்சனை!

இந்தியாஎன்பதுஒருதுணைக்கண்டம். அதனால், நாடு முழுமைக்கும் ஒரே கல்விக் கொள்கை சரியானதாக இருக்காது. இருமொழிக் கொள்கையை உறுதியாக பின்பற்றி வருகின்ற நாங்கள், தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்துகின்ற மும்மொழிக் கொள்கையை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதற்காக, நியாயமாக எங்களுக்கு வர வேண்டிய கல்வி நிதியை ஒன்றிய பா.ஜ.க. அரசு தர மறுக்கிறார்கள். மற்ற நிதி ஒதுக்கீட்டிலும், தமிழ்நாட்டிற்கு ஓரவஞ்சனை காட்டுகிறார்கள்.

தமிழ்நாடு அரசு தன்னுடைய உரிமைகள் ஒவ்வொன்றையும், தொடர்ந்து சட்டப் போராட்டங்கள் மூலமாகத்தான் நிலைநாட்டி வருகிறது. நியமன ஆளுநரின் முட்டுக்கட்டைகள், ஒன்றிய அரசின் தடைக் கற்கள் என்று பல வரலாம். ஆனாலும், தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்!

எத்தனையோ இடர்கள், எத்தனையோ தடைக்கற்கள், எத்தனையோ சூழ்ச்சி அரசியல்கள். ஆனால், எந்த வகையிலும் திராவிட மாடல் அடிப்படையிலான தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்க முடியவில்லை! அதனால்தான், இந்தியா விலேயே இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை எட்டிக்காட்டிய ஒரே மாநிலமாக திராவிட மாடல் தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறது.

எங்களுக்கு ஒரு இலக்கு இருக்கிறது. 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றவேண்டும்! இந்த இலக்கை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறோம்! நிச்சயமாக சொல்கிறேன், திராவிட மாடல் 2.0ல் அதையும் சாதித்து காட்டுவோம்!

எங்களுடைய Roadmap தெளிவாக இருக்கிறது! அதனால்தான், தொழில் வளர்ச்சியில் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டை நோக்கி முதலீடுகள் வருகிறது!

இன்றைக்கு நீங்கள் கூடியிருக்கும் கோயம்புத்தூர், தென்னிந்தியாவின் மான்செஸ்டராக இந்த வளர்ச்சியின் முக்கியமையங்களில்ஒன்றாகவிளங்குகிறது!

தொலைநோக்குப் பார்வையுடன், தமிழ்நாட்டிற்கான எதிர்காலத்தை வலிமையாக கட்டமைக்க வேண்டும் என்று மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்காக பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவு வழங்குகிறோம். இளைஞர்களை Upskill செய்கின்ற "நான் முதல்வன் திறன் மேம்பாட்டு திட்டம்", ஆயிரம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில், கல்வி பயில வாய்ப்பு உருவாகியிருக்கின்ற திறனறி தேர்வுத் திட்டம்!

> **"இந்தியா என்பது ஒரு துணைக்கண்டம். அதனால், நாடு முழுமைக்கும் ஒரே கல்விக் கொள்கை சரியானதாக இருக்காது. இருமொழிக் கொள்கையை உறுதியாக பின்பற்றி வருகின்ற நாங்கள், தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்துகின்ற மும்மொழிக் கொள்கையை ஒருநாளும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்."**

பெண்களின் உயர்கல்வியை ஊக்குவிக்க, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற புதுமைப் பெண் திட்டம்.

அதேபோல, மாணவர்களுக்கான தமிழ்ப் புதல்வன் திட்டம் என்று நாங்கள் உருவாக்கியிருக்கின்ற திட்டங்கள் எல்லாம் அதனுடைய நோக்கத்தில் வெற்றியடைந்து கொண்டிருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரைக்கும், கல்விக்கு எந்தத் தடையும் ஏற்படக் கூடாது! ஏனென்றால், கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள் நாங்கள்.

கல்வி என்பது நாம் போராடி பெற்ற உரிமை! இன்றைக்கும் கல்விக்கு எப்படிப்பட்ட இடர்கள் உருவாக்கப்படுகிறது என்று உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும்!

நான் உறுதியாக சொல்கிறேன் யார் எத்தனை தடைகளை ஏற்படுத்தினாலும், கல்வியில் எங்கள் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது.

அதேபோல, பெண்கள் முன்னேற்றம் மற்றும் பாலினச் சமத்துவத்தை நோக்கியும் உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

மகளிர் உயர மாநிலம் உயரும்! அதற்காக, ஒரு கோடியே 15 இலட்சம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய் பெறும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், 528 கோடி முறை கட்டணமில்லா பேருந்து பயணம் மேற்கொண்டிருக்கின்ற விடியல் பயணம் திட்டம் போன்றவற்றை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம்!

நல்லரசுக்கான இலக்கணம் இதுதான்!

எதிர்காலத்திற்கான வலிமையான கட்டமைப்புகளை உருவாக்கி, மக்களுடைய தேவைகளை உணர்ந்து, அதற்கான திட்டங்களை உருவாக்குவதுடன், அந்தத் திட்டங்கள் எளிமையாக மக்களிடம் சென்றடைவதை உறுதி செய்வதுதான் நல்லரசுக்கான இலக்கணம்!

அந்த வகையில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் மூலம், 10 ஆயிரம் சிறப்பு முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு, இதுவரை, 5 ஆயிரத்து 691 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. இதில், 46 அரசுத்துறை சேவைகளை வழங்குகிறோம்.

மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கி, அவர்கள் குரல் ஒலிப்பதை உறுதி செய்திருக்கிறோம்.

இப்படி, மக்களுக்கான தேவைகள் என்னவென்று பார்த்து, பார்த்து செய்வதால் தான், பலரும் நம்முடைய திராவிட மாடல் அரசை இந்தியாவிற்கான வழிகாட்டியாக சொல்கிறார்கள்.

யூடியூப்ல் பல வடஇந்திய சேனல்களும், திராவிட மாடலின் செயல்பாடுகளை தங்களுடைய மாநில மக்களுக்கு எடுத்துச் சொல்கிறார்கள்.

நேற்றுகூட, 'கோன் பனேகா குரோர்பதி' (KBC) நிகழ்ச்சியில், அமிதாப் பச்சன் அவர்கள் மன்னார் வளைகுடாவில் இருக்கின்ற கரியாச்சல்லி தீவை காப்பாற்ற திராவிட மாடல் அரசு எடுத்து வருகின்ற முயற்சிகளைப் பற்றி சொல்லியிருக்கார். இப்படி, யாரையும் புறக்கணிக்காத, திட்டமிட்ட வளர்ச்சிப் பாதையில் செல்லும் தமிழ்நாட்டின் பயணம், ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி, ஒவ்வொரு பெண்ணுக்கும் மேம்பாடு, ஒடுக்கப்பட்டவருக்கு உயர்வு என்பதை உறுதி செய்கிறது.

உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்போடு, உலக அளவில் தலை சிறந்த மாநிலமாக, தமிழ்நாட்டை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து நாங்கள் மேற்கொள்வோம் என்று உறுதியளித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

"மாநில சுயாட்சிக்காக ஒன்றிய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிவரும் தமிழ்நாடு முதலமைச்சரின் கரங்களை வலுப்படுத்துவோம்!"

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - காஞ்சிபுரம் அண்ணா இல்லத்திலிருந்து தேர்தல் பயணத்தைத் தொடங்கினார்!

சென்னை, செப்.10- காஞ்சிபுரத்தில் துணை முதலமைச்சரும் - கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (09-09-2025) தேர்தல் பயணத்தைத் தொடங்கியது குறித்த கழகத்தின் செய்தி அறிக்கை வருமாறு :-

பேரறிஞர் அண்ணாவின் வழியில், காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணாவின் இல்லத்தில், அவரை வணங்கி 2026க்கான தனது தேர்தல் பயணத்தைத் துணை முதலமைச்சரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தொடங்கினார்.

மாநில அளவில் திமுகவின் கட்டமைப்பை வலுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, மாவட்டம்தோறும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயணம் மேற்கொள்கிறார்.

அங்கே கழக மாவட்டத்தின் அனைத்து நிலையிலுள்ள நிர்வாகிகளையும் நேரில் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

இக்கூட்டங்களில் நிர்வாகிகளுக்கு கழகத்தின் பாரம்பரிய அடையாளமான கருப்பு சிவப்பு துண்டு அணிவிக்கின்றார். அனைவரின் கருத்துகளும் கேட்கப்பட வேண்டும் என்கிற ஜனநாயகப்பூர்வமான நோக்கத்தில் கருத்துப் பெட்டிகள் வைக்கப்பட்டு, படிவங்களும் வழங்கப்பட உள்ளன. இதன்மூலம் நிர்வாகிகள் தங்களது கருத்துகள், கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை விரிவாகப் பகிர்ந்துகொள்ள முடியும்.

இந்த படிவங்களைத் துணை முதலமைச்சர் படித்து, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரடியாகக் கொண்டு செல்ல திட்டமிட்டுள்ளார்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற இன்றைய கூட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையில் சிறப்பாகச் செயல்பட்ட முதல் பத்து நிர்வாகிகளுக்கு பாராட்டுகள் தெரிவித்து, அவர்களுடன் துணை முதலமைச்சர் அவர்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

கருத்துப் பெட்டியிலிருந்து சில படிவங்களை தேர்ந்தெடுத்து, அவை குறித்து நிர்வாகிகளுடன் உரையாடி, அவர்களின் கேள்விகளுக்கும் துணை முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தார். பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்களுடனும் தன்னார்வலர்களுடனும் கலந்துரையாடினார்.

பேரறிஞர் அண்ணாவின் முதன்மை கொள்கையான மாநில சுயாட்சி முழக்கத்தை முன்வைத்து ஒன்றிய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக போராடிவரும் தமிழ்நாடு முதலமைச்சரின் கரங்களை வலுப்படுத்த உழைக்க வேண்டும் என துணை முதலமைச்சர் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்பு (விளம்பரம்)த் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ன் படி தமிழ்நாடு அரசின் சார்பில். செய்தி-மக்கள் தொடர்புத்துறை வெளியிடும் மாநில மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் (State and District Tender Bulletin) ஓர் ஆண்டு அச்சிடும் பணிக்கு இதே போன்று அரசு அல்லது அரசு சார்ந்த, அமைப்புகளின் இதழ் அச்சிடும் பணியில் முன் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து மட்டும் 23.09.2025 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்த விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 23.09.2025 மாலை 4.00 மணிக்கு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கான ஒப்பந்த விலைப்புள்ளிகள் சென்னையில் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 9 அவர்கள் அலுவலகத்தில் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மாவட்டங்களில் ஒப்பந்த விலைப்புள்ளிகள் 38 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் அலுவலகங்களில் 23.09.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பெறப்பட்டு அன்று மாலை 4.00 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களால் திறக்கப்படும்.

மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அச்சிடும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் இதர விபரங்கள் சென்னையில் "இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009" என்ற பெயரில் வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்டங்களை பொறுத்தமட்டில் மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த "**மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலரின் பெயரில்**" (துதவியின் பெயரில்) வங்கியில் பெறப்பட்ட ரூ.100 (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத்தொகை (EMD) ரூ.1000/- ரூபாய் ஆயிரம் மட்டும்) 23.09.2025 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விற்பனை நிறுத்தப்படும். பணம் ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செஎதொநி/5021/ஒப்பந்தப்புள்ளி/2025 இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை

பெருநகர சென்னை மாநகராட்சி
திடக்கழிவு மேலாண்மை துறை
தி. க. மே. து. ந. க. எண். அ7 / 4075 - 4076 / 2025

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

திடக்கழிவு மேலாண்மை துறையில் proposed Mega Bailing Centre at Manali in Dn.22, Unit 5, Zone 2 ஒப்பம் கோர மேற்பார்வை பொறியாளர் (திகமே) அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

தி. க. மே. து. ந. க. எண். அ7 / 4075 / 2025
Construction of Infrastructure facility building - பணியின் மதிப்பு ரூ.3.70 கோடி

தி. க. மே. து. ந. க. எண். அ7 / 4076 / 2025
Construction of required concrete floor and G. I. sheet roofed building பணியின் மதிப்பு - ரூ.5.50 கோடி

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள்	10.10.2025 பிற்பகல் 3.00 மணிக்குள்
ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்	10.10.2025 பிற்பகல் 4.00 மணிக்கு

ஒப்பந்ததாரர்கள் tntenders.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விவரங்கள் தெரிந்துகொள்ளலாம்.
முன்வைப்பு தொகை ஒரு சதவீதம் E-Tender portal மூலம் online பரிவர்த்தனை முறையில் செலுத்த வேண்டும்
விவரங்கள் ஒப்ப ஆவணம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4955 / ஒப்பந்தப்புள்ளி / 2025 மேற்பார்வை பொறியாளர் (திகமே)

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை 11.09.2025 - வியாழக் கிழமை மாலை 5 மணி அளவில், பஜார் சாலை, மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அவைத்தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி மற்றும் ஒன்றியக்கழகச் செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: கழக ஆக்க பணிகள்

அமைச்சர் மா.சுப்பிரமணியன்,
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.